
இனிய பொங்கல்
நல் வாழ்த்துக்கள்!!!
www.kids.noolagam.com

## பொங்கல் பண்டிகை :

தை முதல் நாள் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது. பொங்கல் நான்கு நாட்களாகக் கொண்டாடப்படும் பண்டிகையாகும்.

அவை :-

i) போகிப் பண்டிகை.
ii) தைப்பொங்கல்.
iii) மாட்டுப்பொங்கல்.
iv) காணும் பொங்கல்.

போகிப் பண்டிகை :

போகிப் பண்டிகை, மார்கழி திங்கள் இறுதி நாளில் கொண்டாடப்படும் பண்டிகையாகும். போகிப் பண்டிகை அன்று, வீட்டினை தூய்மை செய்து, புது வர்ணம் பூசி அழகு படுத்துவர்.

## தைப்பொங்கல் :

உழவர்கள் ஆடி மாதத்தில் விதை விதைத்து, மார்கழி மாத இறுதியில், நெற்கதிர்களை அறுவடை செய்து, தை முதல் நாளன்று, வீடு வந்து சேர்க்கும் திருநாளே பொங்கல் திருநாளாகும். உழவர்கள் தன் உழைப்பிற்கு உறுதுணையாக இருந்த நிலம், நீர், காற்று, சூரியன் போன்ற இயற்கை சக்திகளுக்கும், கால்நடைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் சிறந்த நாளாகும்.

உழவன் இயற்கைக்கும், நாம் உழவனுக்கும், நன்றி தெரிவிக்கும் நன்னாளே தைத்திருநாளாகும்.

## பொங்கல் கொண்டாட்டம் :

பொங்கல் அன்று, அதிகாலையில் எழுந்து, வீட்டு வாயலில் முன் பல வண்ண கோலமிட்டு, மாவிலை தோரணம் மற்றும் காப்பு கட்டி, இறைவனை வணங்கி, புத்தாடை அணிந்து, புது அரிசியினைக் கொண்டு பொங்கலிட்டு, பொங்கல் பொங்கி வர "பொங்கலோ பொங்கல்" என ஆரவாரம் செய்து கொண்டாடுவார்கள். தித்திப்பான கரும்பினை உண்டு மகிழ்வர். உற்றார் உறவினர் மற்றும் நண்பர்களிடம் பொங்கல் வாழ்த்துக்களை பரிமாறிக்கொள்வர்.

## மாட்டுப்பொங்கல் :

மாட்டுப்பொங்கல், தைப்பொங்கலுக்கு மறுநாள் கொண்டாடப்படும் பண்டிகையாகும். மனிதர்களின் வாழ்வில் பெரும்பங்கு வகிப்பது, கால்நடைகள் தான். உழவுக்கும், தொழிலுக்கும் பயன்படும் கால்நடைகளுக்கு, நன்றி தெரிவிக்கும் திருநாளே மாட்டுப்பொங்கல். மாட்டு பொங்கல் அன்று, வீட்டில் உள்ள கால்நடைகளை (எருது, பசு, ஆடு) குளிப்பாட்டி, கால்நடைகளின் கொம்புகளில் வர்ணம் தீட்டி அலங்கரிப்பர். பொங்கல் திருநாளையொட்டி, மஞ்சுவிரட்டு (ஜல்லிக்கட்டு / ஏறுதழுவுதல்) என்ற வீர தீர விளையாட்டினை விளையாடி மகிழ்வர்.

## காணும் பொங்கல் :

காணும் பொங்கல் அன்று, மக்கள் அனைவரும் தனது குடும்பத்தினருடன், உறவினர், மற்றும் நண்பர்கள் இல்லத்திற்கு சென்று மகிழ்ச்சியுடன் பொங்கலைக் கொண்டாடுவர். இந்நாளில், தங்களுக்கு பிடித்த இடங்களுக்கு சுற்றுலா செல்வர். கிராமங்களில் வாழும் மக்கள், தங்களது வயல்வெளியில் பொங்கல் வைத்து கொண்டாடுவர்.

முடிவுரை :

தை பிறந்தால் வழி பிறக்கும்,
மக்கள் எல்லோருக்கும் நல்வழி பிறக்க,
தைத்திருநாளைக் கொண்டாடுவோம்.